1972 மார்ச் 27]

கேட்டதின் பேரில் 1970-ம் ஆண்டில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏதேனும் உத்திரவு பிறப்பித்துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) உறுப்பினரின் வேண்டுகோள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டது. கோயம்புத்தூரிலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் வழித்தடத்தில் பேருந்துகளைத் திருப்பூர் வழியாக விடுவது அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டது. ஏனெனில், இவ்வாறு திருப்பி விடுவதால் நேரடியாகச் செல்லும் பயணிகளின் பயணக்கட்டணம் உயர்ந்து விடும். மேலும் திருச்சிராப்பள்ளியிலிருந்து உதகமண்டலம் செல்லும் அரசுப் போக்குவரத்து வழித்தடத்தின் மூலம் திருச்சிராப்பள்ளியுடன் திருப்பூர் இணைக்கப்பட்டுள்ளது; அன்றியும், கோயம்புத்தூர்–சென்னை, தூத்துக்குடி–கோயம்புத்தூர் வழித்தடங்கள் மூலம் கோயம்புத்தூருடன் திருப்பூர் இணைக்கப்பட்டுள்ளது. இக்காரணங்களைக் கருத்திற்கொண்டு மேற்சொன்னவாறு முடிவு எடுக்கப்பட்டது. ஆயினும் திருப்பூரிலிருந்து திருச்சிக்கு தனி விரைவு பேருந்து விடப்படுகிறது.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற முறையில் கோவையிலிருந்து திருப்பூருக்கு வரவேண்டுமானால் இரண்டு மைல் தூரம் அதிகமாக இருக்கிறது. ஆகவே இதை மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, திருப்பூரிலிருந்து திருச்சிக்கு விரைவு பேருந்து விடப்படுகிறது. கோவையிலிருந்து திருப்பூர் வழியாகத் திருச்சிக்கு விரைவுப் பேருந்து விடுவோமானால் திருப்பூரில் டிக்கட் கிடைப்பது கடினம்.

அரசு பேருந்துகள்

*733 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடிக்கும் போளூருக்குமிடையே ஆலங்காயம் வழியாக அரசு பேருந்து வண்டிகளை விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.